www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V8T

விருதுநகர் மாவட்டம்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

**வகுப்பு 8**

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .............

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்

இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

2) நன்செய் - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்

3) வானில் கரு ............. தோன்றினால் மழை பொழியும் என்பர்.

அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

4) பறவைகள் ............. பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

5) அறிந்தது+அனைத்தும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............

அ) அறிந்தது அனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **2×1=2**

6) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .............

7) செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது .............

**III. பொருத்துக:** **3×1=3**

8) ஆயுத எழுத்து பிறக்கும் இடம் - கழுத்து

9) ஏவல் வினைமுற்றுச் சொல் - தலை

10) இடையின மெய்யெழுத்துக்கள் பிறக்கும் இடம் - ஓடு

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **6×2=12**

11) உலகம் எவற்றால் ஆனது?

12) பழியின்றி வாழும் வழியாக திருக்குறள் கூறுவது யாது?

13) ஓவிய எழுத்து என்றால் என்ன?

14) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

15) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

16) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

17) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

18) மெய்யெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **2×4=8**

19) கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

20) நீர் நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

21) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**VI. எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி:** 1×5=5

22) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

23) பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

**VII. அடிபிறழாமல் எழுதுக:** 1×3=3

24) 'வாழ்க நிரந்தரம்' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.

**VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 2×2=4

25) **கலைச்சொல் எழுதுக:**

அ) Epigraph -

ஆ) Leopard -

26) **ஒரே சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக:**

அ) திங்கள் -

ஆ) ஆறு -

27) **தொடர்களை மாற்றுக:**

அ) காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சித் தொடராக மாற்றுக)**

ஆ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. **(வினாத் தொடராக மாற்றுக)**

**IX. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை அளிக்க:** 1×8=8

28) 'நான் விரும்பும் கவிஞர்' கட்டுரையை எழுதுக.

29) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com